DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.9**

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Caste | |
| Father's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27-01-2026

முதல் விசாரணை

1. நான் தற்போது திருச்சி வட்டார தடய அறிவியல் துறையில் துணை இயக்குனராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு திருப்பூர் மாவட்ட தடய அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வந்தபோது 12.05.2017 ஆம் தேதி வெள்ளகோவில் காவல் ஆய்வாளர் அவர்களிடம் இருந்து தொலைபேசி மூலம் கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் வெள்ளக்கோயில் காவல் நிலைய குற்ற எண்.89/2017 வழக்கின் சம்பவ இடமான கச்சேரி வலசு பகுதியில் உள்ள கால்நடை மருத்துவர் தனபதி என்பவர் வீட்டில் 22.05.2017 ஆம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் மேற்படி வீட்டை பார்வையிட்டேன்.

2. அங்கு சேகரிக்கப்பட்ட தடையப் பொருட்களான சுவற்றிலிருந்து Swab மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ரத்த மாதிரி, டைல்ஸ் தரையில் இருந்து சேகரிக்கப்பட்ட ரத்த மாதிரி கிரில் கேட்டில் இருந்து சேகரிக்கப்பட்ட ரத்த மாதிரி, கிரில் கேட்டில் இருந்து சுரண்டி எடுக்கப்பட்ட ரத்தம், ரத்தம் படிந்த யூரியா பேகின் ஒரு பகுதி ஆகியவற்றை குருதியியல் மற்றும் உயிரியல் ஆய்வுக்காக தடையை ஆய்வகத்திற்கு அனுப்ப அறிவுருத்தினேன். மேற்படி பொருட்கள் சேகரிக்கப்பட்டது தொடர்பாக வெள்ளக்கோயில் காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் **நான் வழங்கிய கடிதம் அ.சா.ஆ.6. சுவற்றிலிருந்து**

**சேகரிக்கப்பட்ட இரத்த மாதிரி சா.பொ.4, கிரில் கேட்டிலிருந்து சுரண்டி எடுக்கப்பட்ட இரத்தமாதிரி சா.பொ.5, கிரில் கேட்டிலிருந்து துடைத்து எடுக்கப்பட்டட இரத்த மாதிரி சா.பொ.6, இரத்தம் படிந்த யூரியா பேக்கின் பகுதி சா.பொ.7.** மேற்படி வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 12.5.2017 ஆம் தேதி எத்தனை மணிக்கு எனக்கு காவல் ஆய்வாளரிடம் இருந்து அழைப்பு வந்தது என்பது குறித்து நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக காவல்துறையினர் ஃபோன் மூலம் தகவல் சொன்னால் சம்பவ இடத்திற்கு செல்லும் நடைமுறை எங்கள் அலுவலகத்தில் கடைபிடிக்கப்படுகிறது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு போன் மூலம் தகவல் சொல்லப்படும்போது எங்கள் அலுவலகத்தில் நாங்கள் பராமரிக்கும் SOC நோட் புக்கில் அது குறித்து பதிவு செய்வோம். மேற்படி பதிவேட்டை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் ஒரு நகலில் நாங்கள் கையெழுத்து போட்டு அவர்களிடம் கொடுத்து விடுவோம். சம்பவ இடத்தை பார்வையிட்டு நாங்கள் தயார் செய்யும் அறிக்கையை போலீசார் வேண்டுகோள் கடிதம் மூலம் கேட்டால் அவர்களிடம் கொடுப்போம். இந்த வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட சொல்லி தான் வேண்டுகோள் கடிதம் கொடுத்தாரே தவிர அறிக்கையை சமர்ப்பிக்க சொல்லி வேண்டுதல் கடிதம் கொடுக்கவில்லை.

2. இந்த வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிடச் சொல்லி ஒரே காப்பியை எங்களிடம் கொடுத்தார்கள். அது தற்போது என் வசம் இல்லை அலுவலகத்தில் உள்ளது. என்னிடம் அவ்வாறு எந்தவிதமான வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்படாதால்தான் அதை போலீசாரிடம் நான் ஒப்படைக்கவில்லை என்றாலும் போலீசாரம் நீதிமன்றத்தில் அதை ஒப்படைக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. தடயவியல் துறையும் காவல்துறையும் பொதுவாக இணைந்து செயல்படுவதால் நடைமுறைகளை சரிவர பின்பற்ற மாட்டோம் என்று சொன்னால் சரியல்ல. நான் 12.5.2017 ஆம் வருடம் சம்பவ இடத்திற்கு சென்றேன் மதியம் 2:30 மணிக்கு மேல் அங்கு சென்றேன். எங்கள் அலுவலகம் மாவட்ட காவல் அலுவலகத்தில் தனியாக உள்ளது. எங்கள் அலுவலகத்தில் நான் மட்டும்தான் பணியில் இருந்தேன். ஓட்டுநர் இருப்பார். நான் சேகரித்த ரத்த மாதிரி எந்த அறையில் இருந்த டைல்ஸில் இருந்து சேகரிக்கப்பட்டது என்பதை நான் குறிப்பிட்டுள்ளேன். நான் சம்பவ இடத்தை பார்வையிட்ட போது மேற்படி வீட்டின் ஹாலில் அதிக அளவில் ரத்தம் படிந்து இருந்தது. வீட்டின் கேட்டின் வெளிப்புறத்தில் ரத்த மாதிரி எதுவும் சேகரிக்கப்படவில்லை. மேற்படி கேட்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கேட் அல்ல பெயிண்ட் அடிக்கப்பட்ட கேட் ஆகும். மேற்படி இடத்தில் வேறு எந்த தடய பொருட்களும் கிடைக்கவில்லை. இரண்டு வகையான ரத்த மாதிரிகள் இருப்பதாக ஆய்வாளர் எனக்கு கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தாரா என்றால் இல்லை.

3. நான் சம்பவ இடத்திற்கு காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டு ஆய்வாளருடன் வந்தேன். சம்பவ இடத்திலிருந்து தடயப் பொருட்கள் எவ்வாறு சேகரிக்கப்பட்டது என்று ஆய்வாளரிடம் தெரிவித்தேன் அது குறித்து அறிக்கையில் நான் குறிப்பிடவில்லை. தடயப் பொருட்களை எவ்வாறு சேகரித்து பதப்படுத்தினேன் என்று நான் ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சங்கதி குறித்து ஆய்வாளர் இடம் தெரிவித்ததாக வழக்குக்காக தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய வழிகாட்டுதலின் அடிப்படையில் தடையப் பொருட்கள் சேகரித்து பதப்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தடயப்பொருட்கள் சேகரிக்கப்பட்ட தினத்தன்றே ஆய்வாளிடம் ஒப்படைக்கப்பட்டன. மேற்படி பொருட்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று ஆய்வாளிடம் தெரிவித்தேன் அது குறித்து போலீஸ் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு எந்த விதமான அறிவுறுத்தலும் போலீசாருக்கு நான் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல்துறைக்கு ஆதரவாக தவறான சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.01.27 20:26:42 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.10**

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணன் | Caste | |
| Father's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27-01-2026

முதல் விசாரணை

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவலராக பணியாற்றி கடந்த 2017 ஆம் வருடம் பணி ஓய்வு பெற்று விட்டேன். 2017 ஆம் வருடம் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது 12.5.2017 ஆம் தேதி ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து காலை 10:30 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்கள் தங்கராஜ் என்பவருடைய பிரேதத்தை பிரேத விசாரணை முடித்து என்னிடம் ஒப்படைத்தார். மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை முடித்து மீண்டும் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அதை அவரது உறவினர் வசம் ஒப்படைத்தேன். மேற்படி பிரேதத்திலிருந்து காலர் வைத்த கருப்பு சிவப்பு நீல நிற வெள்ளை கோடு போட்ட அரக்கை டி–ஷர்ட் ஒன்று, சாம்பல் நிற பனியன் ஒன்று, ஊதா மற்றும் சிமெண்ட் கலர் கலந்த ஒரு டிராயர் ஒன்று மற்றும் சிகப்பு நிற அரைஞாண்கயிறு, சிமெண்ட் மற்றும் ஊதா நிறம் கலந்த லுங்கி ஒன்று, ஆகியவற்றை கைப்பற்றி அவற்றை தனி அறிக்கையின் மூலம் காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். மேற்படி தனி அறிக்கை அ.சா.ஆ.7. பிரவுன் மற்றும் சிமெண்ட் கலர் கலந்த அரைக்கால் ராயர் சா.பொ.8 வயலட் மற்றும் சிமெண்ட் கலர் கலந்த லுங்கி சா.பொ.9, அரைக்கை காலர் வைத்த டீ சர்ட் சா.பொ. 10 காவல் ஆய்வாளர் மேற்படி வழக்கு

தொடர்பாக என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தாக்கல் செய்த தனி அறிக்கையில் மேற்படி பிரேதத்தை எத்தனை மணிக்கு நான் பிரேத விசாரணை முடித்து பெற்றேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பிரேத விசாரணை அறிக்கை மற்றும் தனி அறிக்கை ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்ததால் தான் மேற்படி பிரேதத்தை நான் பெற்ற நேரத்தை குறிப்பாக அதில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்துறை விசாரணையில் ஏற்படும் நேர முரண்பாடுகளை தவிர்க்க வேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே மேற்படி நேரத்தை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. அறிக்கையில் நான் மாலை 5 மணிக்கு ஆய்வாளிரிடம் அறிக்கை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி அறிக்கையில் என்னுடைய கையெழுத்துக்கும் மேல் ஒரு வரியை இடைச்செருகலாக எழுதியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து சான்று பொருட்களை என்னிடம் ஒப்படைக்கும் போது அதை எந்த முறையில் என்னிடம் ஒப்படைத்தார்கள் என்பது குறித்து என்னுடைய அறிக்கையில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். ஆய்வாளர் விசாரணையின் போதும் மேற்படி சங்கதியை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. மேற்படி சான்று பொருள்களை யார் பேக் செய்தார்கள் என்பது குறித்து அறிக்கையிலோ அல்லது ஆய்வாளர் விசாரணையிலோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் அரசு பேருந்தில் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னுடைய பாஸ்போர்ட்டை நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளேன். திரும்ப வரும்போதும் நான் பேருந்தில் தான் வந்தேன் என்றால் சரிதான். தடய பொருட்களை எந்த பையில் வைத்து எடுத்து வந்தேன் என்பதை என்னுடைய அறிக்கையிலோ அல்லது ஆய்வாளர் விசாரணையிலோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எத்தனை

மணிக்கு தடையப் பொருட்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன என்பதை என்னுடைய அறிக்கையிலோ அல்லது ஆய்வாளர் விசாரணையிலோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முறையான பாதுகாப்பின்றி நான் தடயப் பொருட்களை கொண்டு வந்திருப்பது சட்டவிரோதம் என்று சொன்னால் சரியல்ல. காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.01.27 20:26:48 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.11**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயபிரகாஷ் | Caste | |
| Father's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27-01-2026

முதல் விசாரணை

1. நான் தற்போது திருப்பூர் அரசு மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.5 2017 ஆம் தேதி நான் காங்கேயம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வந்த போது இரவு 8.10 மணிக்கு 34 வயது கொண்ட சொரியன் கிணற்று பாளையத்தைச் சேர்ந்த தங்கராஜ் என்பவரை அவருடைய சகோதரர் சுப்பிரமணி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது அவர் தன்னை ஒரு தெரிந்த நபரால் தோப்பு மணி ஹவுஸ் என்ற இடத்தில் வைத்து அன்று தினம் 7.30 மணியளவில் கத்தியால் தாக்கப்பட்டதாக என்னிடம் சொன்னார் நான் அவரை பரிசோதித்த போது அவருக்கு சுயநினைவு இருந்தது அவரது வலது பக்க மேல் வயிற்றில் துளைக்கப்பட்ட காயம் ஒன்று இருந்தது.

2. இடது தொடையில் 5x2x1 சென்டிமீட்டர் அளவுள்ள சிதைந்த காயம் ஒன்று இருந்தது. இடது முழங்கையில் 3x1x1 செண்டிமீட்டர் அளவுள்ள சிதைந்த காயம் ஒன்று இருந்தது. அவரை நான் மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி **விபத்து பதிவேட்டு அறிக்கையின் உண்மை நகல் அ.சா.ஆ.8** (எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன்). என்னிடம்ம காட்டப்படும் சா.பொ.2 ஆயுதத்தை

பயன்படுத்தினால் அவருக்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. விபத்து பதிவேட்டு அறிக்கையின் அசலை நான் ஆய்வாளிடம் ஒப்படைத்து உள்ளேன். ஆய்வாளர் என்னை 12.07.2017 ஆம் தேதி என்னை விசாரித்தார். மேற்படி தேதியில் நான் எங்கு பணிபுரிந்தேன் என்று குறிப்பாக சொல்ல முடியாது. எந்த மருத்துவமனையில் நான் பணிபுரிந்த போது ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்று என்னால் குறிப்பாக சொல்ல முடியாது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்த போது நான் திருப்பூரில் பணிபுரிந்து இருந்தால் காங்கேயத்தில் இருக்கும் அசல் விபத்து பதிவேட்டு அறிக்கையை அவரிடம் நான் ஒப்படைத்திருக்க முடியாது என்று சொன்னால் சரிதான். காயம்பட்ட நபருக்கு தொடையில் இருந்த காயம் குறித்து நான் ஆய்வாளரிடம் தெரிவித்துள்ளேன். அவருக்கு மொத்தம் மூன்று காயங்கள் இருந்தது. ஆய்வாளர் விசாரணையில் நான் நான்கு காயங்கள் இருந்ததாக குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் சரிதான். காயம்பட்ட நபரின் சகோதரர் குறிப்பிட்ட விவரங்களை அடிப்படையில் நான் விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். காயம்பட்ட நபரை நான் விசாரித்தபோது என்னிடம் பேசினார். காயம்பட்ட நபரை மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனை சொல்லச் சொல்லி 8.20 மணிக்கு அனுப்பி வைத்தேன். அவர் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு செல்லாமல் நேரடியாக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

2. காங்கயம் அரசு மருத்துவமனையில் இருந்து திருப்பூர் அரசு மருத்துவமனை தான் அருகில் உள்ளது. ஈரோடு அரசு மருத்துவமனைக்கு செல்லச் சொல்லி நான் நோயாளியை அறிவுறுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். நான் காயம் பட்ட நபருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கித்தான் திருப்பூர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். காயம்பட்ட நபர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சென்றார். அரசு ஆம்புலன்ஸில் பயணம் செய்திருந்தால் நான் பரிந்துரைத்த திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லப்பட்டு இருப்பார் என்று சொன்னால் சரிதான். ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்வதற்காக எடுத்த முடிவு நோயாளியின் உறவினர்களால் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தால் விரைவாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருப்பார் என்று சொன்னால் சரிதான். ஈரோடு மற்றும் திருப்பூர் அரசு மருத்துவமனைகளில் ஒரே மாதிரியான மருத்துவ

வசதிகள் உண்டு என்று சொன்னால் அது குறித்து கூற இயலாது. நான் விசாரித்த வரையில் அவருக்கு உள்ளுறுப்புகளில் எவ்வாறு காயம் ஏற்பட்டிருந்தது என்பதை குறிப்பாக சொல்ல இயலாது என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு சுமார் பத்து நிமிடங்கள் முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டது. காங்கயம் அரசு மருத்துவமனையில் ஆக்சிஜன், வென்டிலேஷன் , ஐவி ப்ளுயட் வசதி கொண்ட ஆம்புலன்ஸ் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

3. காயம்பட்ட நபர் அரசு ஆம்புலன்ஸ் மூலம் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தால் அவரது உயிரை காப்பாற்றி இருக்கலாம் என்று சொன்னால் அது குறித்து உறுதியாக சொல்ல இயலாது. காயம்பட்ட நபர் என்னுடைய ஆலோசனைப்படி திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அரசு ஆம்புலன்சில் செல்லாமல் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றதால் ஏற்பட்ட காலதாமதம் காரணமாகத்தான் அவரது இறப்பு ஏற்பட்டது என்று சொன்னால் அது குறித்து உறுதியாக சொல்ல இயலாது. போலீசாரிடம் நான் அசல் விபத்து பதிவேட்டு அறிக்கை வழங்கவில்லை என்றாலும் அவர்களும் என்னிடம் கைப்பற்றவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. அசல் ஆவணம் இன்றி நான் அளிக்கும் சாட்சியம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.01.27 20:26:56 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.12**

| | | |
|---|---|---|
| Name | : கருணாகரன் | Caste |
| Father's Name | : | Calling |
| Age | : | Taluk |
| Village | : | District |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27-01-2026

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி இறுதியாக 2022 ஆம் வருடம் கோயம்புத்தூரில் பணிபுரிந்து ஓய்வு பெற்று உள்ளேன். 2017 ஆம் வருடம் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 11.05.2017 ஆம் வருடம் இரவு 11.30 மணிக்கு நான் நிலைய அவலுவலில் இருந்தபோது, சொரியன் கிணத்து பாளையத்தைச் சேர்ந்த பழனி மகன் சுப்பிரமணியன் என்பவர்நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரை பெற்று வெள்ளகோவில் காவல் நிலைய குற்ற எண் 209/2017 சட்ட பிரிவுகள் 302 இதசபடி வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9.** புகார்தாரர் இறந்துபோனவரின் ரத்தம் தன்னுடைய சட்டையில் படிந்து இருப்பதாக கூறி அவரது சட்டையை என்னிடம் ஒப்படைத்தார். அதை இரவு 11.50 மணிக்கு படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். மேற்படி படிவம் 91 இல் புகார்தாரிடமும் அவருடன் வந்த ராமசாமி என்பவரிடமும் கையெழுத்து பெற்றேன். அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை துரித தபால் மூலம் நீதிமன்றத்திற்கு நிலையை எழுத்தர் மூலம் அனுப்பி வைத்தேன். அதன் நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை

விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எழுதப்பட்ட புகாரை புகார்தாரர் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார் அவரே எழுதினாரா என்று எனக்கு தெரியாது. புகார்தாரருக்கு எழுதப்படிக்க தெரியாத விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகாரில் பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயர் சிவன்மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தகப்பனார் தன்னுடைய மகளின் பெயரை புகாரில் தவறாக குறிப்பிடமாட்டார் என்றாலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் காவல் நிலையத்தில் வைத்து எங்களால் தயார் செய்யப்பட்டது என்பதால் தான் அவரது பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. புகாரில் ஒன்பதாவது வரியில் குறிப்பிடப்பட்டுள்ள அம்புக் குறி போட்டு அவளது என்று எழுதி இருப்பது படிக்காத நபரால் எழுதி இருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. புகாரில் சாட்சி கையெழுத்து ஏதும் வாங்கவில்லை. புகாரில் குத்தி கொலை செய்த என்ற இடத்தில் கொலை என்ற வார்த்தை அம்புக்குறி இட்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.01.27 20:27:03 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.13**

| | | | |
|---|---|---|---|
| Name | : மோகன்ராஜ் | Caste | |
| Father's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27-01-2026

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோடு மாவட்டம் காஞ்சி கோவில் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.07.2017 ஆம் தேதி வெள்ளகோவில் காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றி வந்தபோது காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் வெள்ளகோவில் குற்ற வழக்கு எண் 209/2017 வழக்கு தொடர்பான இறந்து போன தங்கராஜ் என்பவரது இறப்பிற்கு முன் அவர் அணிந்திருந்த துணி வகைகளை ஈரோடு அரசு மருத்துவமனையில் வைத்து மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கைப்பற்றி இருந்தார். நான் ஆய்வாளர் உத்தரவின் பேரில் அதை மேற்படி மருத்துவரிடமிருந்து பெற்று கோயம்புத்தூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஆய்வுக்காக ஒப்படைத்தேன். அதற்கான ரசீதை ஆய்வாளர் வசம் அன்றைய தினமே நான் ஒப்படைத்தேன். இது தொடர்பாக நீதிமன்றத்தில் ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு அங்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் நான் மேற்படி பொருட்களை ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். **மேற்படி கடிதம் அ.சா.ஆ.10.** வழக்கு தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி சான்று பொருட்களை 11.00 மணிக்கு நீதிமன்றத்தில் இருந்து நான் வாங்கினேன். சுமார் 3.00 மணிக்கு கோயம்புத்தூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் மேற்படி பொருட்களை ஒப்படைத்தேன். அன்றைய தினம் நான் பேருந்தில் கோயம்புத்தூர் பயணம் செய்தேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து எவ்வாறு மேற்படி பொருட்கள் பேக் செய்யப்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்று நான் ஆய்வாளரிடம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி தடய பொருட்களை எவ்வாறு கொண்டு சென்றேன் என்பதை குறித்து என்னுடைய போலீஸ் விசாரணை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். தடயப்பொருட்களை பேருந்தில் தான் நான் எடுத்துச் சென்றேன் என்றால் சரிதான். நான் ஆய்வாளரிடம் தனி அறிக்கை எதையும் கொடுக்கவில்லை பாஸ்போர்ட் மட்டும் கொடுத்தேன். நான் சரியான பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றாமல் தடயப் பொருட்களை தடைய அறிவியல் ஆய்வகத்திற்கு எடுத்துச் சென்றுள்ளேன் என்றாலும் அது சட்டப்படி ஏற்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.01.27 20:27:09 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.